අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය 'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு 'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
Ministry of Education, Higher Education and Vocational Education 'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/09/17/02/HE.CO(2025) ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. දිනය / திகதி / Date 2025.04. 4

**சுற்றிக்கை எண் : 18/2025**

சகல மாகாண கல்விச் செயலாளர்கள்
சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள
சகல கோட்டங்களுக்கும் பொறுப்பான பிரதி / உதவி கல்விப் பணிப்பாளர்கள்
சகல அதிபர்கள

**மனைப்பொருளியல் திறன் அபிவிருத்தி போட்டித்தொடர்**

10 மற்றும் 11 ஆம் தரங்களில் கல்வி பயிலும மனப்பொருளியலை ஒரு பாடமாக கற்கும் மாணவர்களின் கோட்பாட்டு, செயன்முறை, ஆராய்ச்சி மற்றும் படைப்பாற்றல் திறன்களை வளர்ப்பதற்காக, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் கல்வித் தர மேம்பாட்டுப் பிரிவின் தொழில்நுட்பக் கல்விக் கிளையால் ஆண்டுதோறும் திறன் மேம்பாட்டுப் போட்டி நடத்தப்படுகிறது. இதன்படி இந்த போட்டிகளை பாடசாலை, கோட்டம், வலம் மற்றும் மாகாண மட்டங்களில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். மாகாண மட்டத்தில் வெற்றிபெறும் மாணவர்கள் தேசிய மட்டத்திற்கு முன்வைக்கப்பட வேண்டும். (2025 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்)

1. **குறிக்கோள்**
   1. உணவு மற்றும் போஷாக்குதொடர்பாக மாணவர செயல்திறமையை விருத்தி செய்தல் .
   2. ஜவுளி தொழில்நுட்பம் தொடர்பாக மாணவர்களின் செயல்திறமையை விருத்தி செய்தல்
   3. குழந்தை வளர்ச்சி தொடர்பாக மாணவர்களின் செயல்திறமையை விருத்தி செய்தல்.
   4. வீட்டு நிர்வாகம் தொடர்பாக மாணவர்களின் செயல்திறமையை விருத்தி செய்தல்.
   5. செயன்முறை வாழ்க்கை திறன்களை விருத்தி செய்தல்
   6. வள முகாமைத்துவம் தொடர்பாக புதிய அணுகுமுறைகளை ஊக்குவித்தல்.
   7. உள்ளூர் மூலப்பொருட்களின் நிலையான பயன்பாட்டை ஊக்குவித்தல்.
   8. பாரம்பரிய சமையல் முறைகள் மற்றும் உள்நாட்டு உணவு பயன்பாடு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தல
   9. விருந்தோம்பல் மற்றும் உணவு பரிமாற்ற கலையை விருத்தி செய்தல்
   10. ஆராய்ச்சி அடிப்படையிலான அணுகுமுறைகளை ஊக்குவித்தல்.
   11. மாணவர்களின் தொழில்முனைவு திறன்களை வளர்த்தல் மற்றும், தொழிற் சந்தையில் நுழைவதற்கான வாய்ப்புகளை உருவாக்குதல
   12. மாணவர்களின் கோட்பாட்டு ரீதியான அறிவை விருத்தி செய்வதற்கான வாய்ப்புகளை வழங்குதல்

**2. போட்டிகளுக்கான அறிவுரைகள்**

- 10 மற்றும் 11 ஆம் தரங்களின் மனைப்பொருளியல் பாடத்தை கற்கும் மாணவர்கள் மட்டுமே போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒவ்வொரு போட்டியின் நோக்கங்கள், நிபந்தனைகள் மற்றும் மதிப்பெண் முறை ஆகியவற்றை மாணவர்களுக்கு விளக்கப்பட வேண்டும்.
- போட்டிகள் தொடர்பாக கல்விச் செயலாளரின் முடிவே இறுதியான முடிவாகும்

2.1 **நடைபெறும் போட்டித்தொடர்கள்**

1 தொகுதி-எழுத்துத் தேர்வு மற்றும் களத் தேர்வு
2 தொகுதி - ஆராய்ச்சி திட்டங்கள
3 தொகுதி -புதிய வடிவமைப்புகள

### 3. மாணவர்களை தெரிவு செய்தல்

### 3.1பாடசாலை மட்டத்தில் மாணவர்களை தெரிவு செய்தல

தொகுதி 1 எழுத்துத் தேர்வு மற்றும் களத் தேர்வு

பாடசாலையில் மனைப்பொருளியல் பாடத்தை கற்கும் மாணவர்களில் 10ஆம் தரத்தில் முதலாம் தவணைப்பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெற்ற மாணவர்களை கீழ்க்கண்டவாறு கோட்ட மட்டப் போட்டிகளுக்கு முன்னிலைப்படுத்த வேண்டும்

| மனைப்பொருளியல் பாடத்தை கற்கும் மாணவர் எண்ணிக்கை | கோட்ட மட்டப் போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட வேண்டிய எண்ணிக்கை |
|---|---|
| 01 - 05 | 1 |
| 06 - 10 | 2 |
| 11 - 20 | 3 |
| 21 - 30 | 4 |
| 31 அல்லது அதற்குமேல் | 5 |

### தொகுதி 2- ஆராய்ச்சி திட்டங்கள்

மனைப்பொருளியல் பாடத்தை கற்கும் 10 மற்றும் 11 ஆம் தரங்களில் ஆராய்ச்சிகளை முன்வைக்கும் அனைத்து மாணவர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம் அம்மாணவர்கள் அனைவரும் கோட்ட மட்டத்திலான போட்டடிகளுக்கு முன்னிலைப்படுத்த வேண்டும

### 3 ஆம் தொகுதி புதிய படைப்புகள்

மனைப்பொருளியல் பாடத்தை கற்கும் 10 மற்றும் 11 ஆம் தரங்களில் புதிய படைப்புகளை சமர்ப்பிக்கும் அனைத்து மாணவர்களும் இதில் பங்கேற்கலாம் அம்மாணவர்கள் அனைவரும் கோட்ட மட்டத்திலான போட்டிகளுக்கும் முன்னிலைரப்படுத்தப்பட வேண்டும்.. கோட்ட மட்டத்திலான போட்டிகளுக்கு முன்னிலைப்படுத்தப்படும்போது பாடசாலை மட்டத்தில் அனைத்து மாணவர்களின் புதிய படைப்புகளை முன்வைக்கும் சந்தர்ப்பங்களை புகைப்படங்கள் மூலமாக உறுதிப்படுத்தி கோட்ட மட்டங்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும். அந்த படைப்புகள் மாணவருடையது என்பதனை பாடசாலையின் பாட ஆசிரியரினால் வழங்கப்படும் பரிந்துரையை அதிபரால் சான்றளிக்கப்பட வேண்டும்.

.இந்த தொகுதி இரண்டு உப தொகுதிகளாக பிரிக்கப்படுகின்றன

1 ஒற்றை உப பிரிவு.
2குழு உப தொகுதி (ஆகக்கூடிய மாணவர்கள் 3 பேராக)

ஓற்றை உப தொகுதியிழன் கழ் முள்வைக்கப்படும் போட்டி பிரிவுகள் அனததும் குழு உப தொகுதிகளின் கீழ் முனவைக்கப்படும் போட்டி பிரிவு அனைத்தும் தெரிவுசெய்து கோட்ட மட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3.2 .கோட்ட மட்டத்தில் மாணவர்களை தெரிவு செய்தல்

1 தொகுதி-எழுத்துமூல தேர்வு மற்றும் இடத்தேர்வு

பாடசாலை மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட அனைத்து மாணவர்களும் கோட்ட மட்டத்தில் எழுத்துத் தேர்வு மற்றும் இடத்தேரிவிற்கு தோற்றியிருக்க வேண்டும் மேலும் அதிக புள்ளிகளைப் பெற்று முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்ற மூன்று மாணவர்களும் வலய மட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். சமமான மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள் இருந்தால், அவர்கள் அனைவரையும் வலய மட்டததிற்கு முன்னிலைப்படுத்தலாம்.. தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் விடைத்தால்களையும் மதிப்பெண்களுடன் வலயாத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.அந்தந்த கோட்டத்திற்குரிய மனைப்'பொருளியல் பாடத்திற்குப் பொறுப்பான ஆசிரிய ஆலோசகர்களுக்கு மற்றும் பாடப் பணிப்பாளர்களிடம் இந்த வினாத்தாள்களின் தயாரிப்பு இடத்தேர்வுகளை நடத்தும் பொறுப்புகயை ஒப்படைக்கப்படும். கோட்ட மட்டத்திலான சான்றிதழ்கள் அந்த கோட்டத்திற்குரிய வலயக்கல்வி பணிமனையில் வழங்கப்பட வேண்டும்.

2 தொகுதி 2- ஆராய்ச்சி திட்டங்கள்

பாடசாலை மட்டத்தில் அனுப்பப்படும் அனைத்து மாணவர்களின் ஆய்வுத் திட்டங்கள் கோட்ட அளவில் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். அதற்கு, இணைப்பு 02 மற்றும் பூர்வாங்க அளவீட்டு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 5 அளவுகோள்களின் ் படி மதிப்பீடு செய்யப்பட வேண்டும். மொத்த மதிப்பெண்கள் 20. ஆகும். அதிக மதிப்பெண்கள் பெற்ற முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் மாணவர்களின் ஆராய்ச்சித் திட்டங்கள், அவர்களின் மதிப்பெண்களுடன் வலயப் போட்டிகளுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்த ஆராய்ச்சித் திட்டங்களை மதிப்பிடும் பொறுப்பு அந்தந்தப் மனைப்பொருளியல் பாடத்திற்குப் பொறுப்பான பணிப்பாளர்களிடம் ஒப்படைக்கப்படும். கோட்ட மட்டத்திலான சான்றிதழ்கள் அந்த கோட்டத்திற்குரிய வலயக்கல்வி பணிமனையில் வழங்கப்பட வேண்டும். கோட்ட மட்ட சான்றிதழ்கள் அந்த கோட்டத்தின் வலயக் கல்வி அலுவலகத்தினால் வழங்கப்பட வேண்டும். வடிவமைப்பு மாணவருக்கு சொந்தமானது என்பது பள்ளியின் பாட ஆசிரியரின் பரிந்துரையின் பேரில் முதல்வரின் சான்றிதழின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

3 -புதிய படைப்புகள்

பாடசாலை மட்டத்தில் அனுப்பப்படும் மாணவர்களின் அனைத்து புதிய படைப்புகளும் கோட்ட மட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். அதற்கு, இணைப்பு 03-ல் குறிப்பிடப்பட்டுள்ள 5 அளவுகோள்களின் மற்றும் அளவுகோல் அளவீட்டு அட்டவணையின்படி மதிப்பீடு செய்யப்பட வேண்டும. மொத்த மதிபபெண்கள் அதிக மதிப்பெண்கள் பெற்ற முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம இடங்களைப் பெறும் மூன்று மாதணவர்களின் படைப்புகளுடன் வலய மட்ட போட்டிகளுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் அந்தந்த கோட்டத்திற்குரிய வலயத்தின் மனைப்பொருளியல் பாடத்திற்குப் பொறுப்பான ஆசிரிய ஆலோசகர்களுக்கு மற்றும் பாட பணிப்பாளர்களுக்கு இந்த புதிய படைப்புகளை மதிப்பீடு செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்படும் கோட்ட மட்டத்திலன சான்றிதழ்கள் அந்த கோட்டத்திற்குரிய வலய கல்வி பணிமணையில் வழங்கப்பட வேண்டும் பாடசாலை மட்டத்தில் அனுப்பப்படும் அனைத்து மாணவர்களின் புதிய படைப்புகளின் படைக்கும் சந்தர்ப்பங்கள் இருக்குமானால், அவற்றை புகைப்படங்கள் மூலம் உறுதி செய்யப்பட்டு வலய மட்டத்திற்கு முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். அந்த படைப்புகள் மாணவருடையதே என பாடசாலையில் பாடத்திற்குப் பொறுப்பான ஆசிரியரனால் பரிந்துரை செய்யப்பட்டு அந்த பரிந்துரையினை அதிகரினால சான்றளிக்கப்பட வேண்டும்

இந்த தொகுதி இரண்டு உப தொகுதிகளாக பிரிக்கப்படுகின்றன

1 ஒற்றை உப பிரிவு
2குழு உப தொகுதி (ஆகக்கூடிய மாணவர்கள் 3 பேராக)

எவவாறாயினும்ர இந்த போட்டி தொகுதியின் கீழ் கோட்ட மட்டத்தில் இருந்து வலய மட்டத்திற்கு ஒற்றை உப தொகுதி மற்றும் குழு உப தொகுதிகள் இரண்டின் கீழும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆகக்கூடிய மொத்த போட்டித் தொடர்களின் எண்ணிக்கை 20 ஆக இருத்தல் வேண்டும்.

### 3.3 வலய மட்டத்தில் மாணவர்களை தெரிவு செய்தல்

**1 தொகுதி- எழுத்துத் தேர்வு மற்றும் களத் தேர்வு**

கோட்ட மட்டத்தில் எழுத்துத் தேர்வு மற்றும் இடத் தேர்வில் தோற்ற வேண்டியதுடன், அதிக மதிப்பெண்கள் பெற்ற முதலாம் இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்ற மூன்று மாணவர்களை வலய மட்டத்திற்கு முன்னிலைப்படுத்த வேண்டும் வலய மட்டத்தில் முதலாம் இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்ற மூன்று மாணவர்களை மாகாண மட்டத்திற்கு முன்னிலைப்படுத்தலாம் . ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் சமமான புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் இருந்தால், அவர்கள் அனைவரையும் மாகாண மட்டத்திற்கு முன்னிலைப்படுத்தலாம். தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விடைத்தாள் மதிப்பெண்களுடன் மாகாணத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். போட்டியை ஏற்பாடு செய்து வினாத்தாள்களைத் தயாரிக்கும் பொறுப்பு, அந்தந்தப் பகுதியின் பிரதி கல்விப் பணிப்பாளர், / உதவிக் கல்விப் பணிப்பாளரின் (மனைப் பொருளியல்) முழு மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறையின் கீழ், அல்லது வலயத்தின் மனைப்பொருளியல் பாடத்திற்குப் பொறுப்பான பிரதி கல்விப் பணிப்பாளர், / உதவிக் கல்விப் பணிப்பாளரிடம் (அபிவிருத்தி) ஒப்படைக்கப்படும் வலய மட்டத்திலான சான்றிதழ்கள் வலயக் கல்வி பணிமனையில் வழங்க்கபட வேண்டும்.

**2 ஆம் தொகுதி ஆராய்ச்சி திட்டங்கள்**

கோட்ட மட்டத்தில் அனுப்பப்படும் அனைத்து மாணவர்களின் ஆய்வுத் திட்டங்கள் வலய மட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். அதற்கு, 5 அளவுகோள்கன் மற்றும் இணைப்பு 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள முன்னேற்ற அளவீட்டு அட்டவணையின்படி மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
20 மதிப்பெண்கள். அதிக மதிப்பெண்கள் பெற்ற முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் மாணவர்களின் ஆய்வுத் திட்டங்கள் மதிப்பெண்களுடன் மாகாணப் போட்டிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். போட்டி ஒழுங்கமைப்பு மற்றும் இந்த ஆராயச்சித் திட்டங்களை மதிப்பீடு செய்யும் பொறுப்பு உரிய வலயத்திற்குரிய மாகாணத்தின் பிரதி கல்விப் பணிப்பாளர்/உதவி கல்விப் பணிப்பாளரின் (மனைப்பொருளியல்) முழு மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறையின் கீழ் வலயத்தின் மனைப்பொருளியல் பாடத்திற்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் அல்லது பிரதி கல்விப் பணிப்பாளர்.'.உதவிக் கல்விப் பணிப்பாளர்(அபிபவிருத்) யிடம் ஒப்படைக்கப்படும். வலய மட்டத்திலான சான்றிதழ்கள் வலயக் கல்வி பணிமனையில் வழங்கப்பட வேண்டும். அந்த திட்டம் மாணவருடையது என்பதனை பாடசாலை ஆசிரியரின் பரிந்துரையுடன் அதிபரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.,

**தொகுதி 3-புதிய படைப்புகள்**

கோட்ட அளவில் அனுப்பப்படும் மாணவர்களின் புதிய படைப்புகள் அனைத்தும் வலய மட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.. அதற்கா இணைப்பு 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள 5 அளவுகோள்கன் மற்றும் அளவீட்டு அட்டவணையின்படி மதிப்பீடு செய்யப்பட வேண் மொத்த மதிப்பெண்கள் 20 ஆகும். அதிக மதிப்பெண்கள் பெற்று முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்ற மூன்று மாணவர்களின் புதிய படைப்புகள் அவர்களின் மதிப்பெண்களுடன் மாகாண போட்டிகளுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும. போட்டிகளின் ஒழுங்மைப்பு மற்றும், இந்தப் புதிய வடிவமைப்புகளை மதிப்பீடு செய்யும் பொறுப்பு, மாகாணத்தின் பிரதி கல்வி பணிப்பாளர் உதவி கல்வி பணிப்பாளர (மனைப்பொருளியல்) ஆகியோரின் முழு மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறையின் கீழ் மனைப் பொருளியல் பாடத்திற்குப் பொறுப்பான பிரதி கல்வி பணிப்பாளர / உதவி கல்வி பணிப்பாளரிடம் அல்லது பிரதி கல்வி பணிப்பாளர / உதவி கல்வி பணிப்பாளரிடம (அபிவிருத்தி) ஒப்படைக்கப்படும்.. வலய மட்ட சான்றிதழ்கள் வலயக் கல்வி அலுவலகத்தினால் வழங்கப்பட வேண்டும். புதிய வடிவமைப்பு மாணவருக்கே உரியது என்பதை பாடசாலையின் பாட ஆசிரியரின் பரிந்துரையுடன் அதிபர் உறுதி செய்ய வேண்டும்.

• இந்த தொகுதி இரண்டு உப தொகுதிகளாக பிரிக்கப்படுகின்றன

1 ஒற்றை உப பிரிவு.
2குழு உப தொகுதி (ஆகக்கூடிய மாணவர்கள் 3 பேராக)

இந்த போட்டித் தொடரின் கழ் வலய மட்டத்தில் இருந்து மாகாண மட்டத்திற்கு ஒற்றை உப தொகுதிழ மற்றும் குழு உப தொகுதி என உப தொகுதிகள் இரண்டின் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆகக்கூடிய மொத்த போட்டி பிரிவுகனழன் எண்ணிக்கை 20 ஆக இருத்தல் வேண்டும்.

3.4 மாகாண மட்டத்தில் மாணவர்கள் தேர்வு

தொகுதி 1-எழுத்துத் தேர்வு மற்றும் களத் தேர்வு

வலய மட்டத்தில் எழுத்து மூல பரீட்சைம ற்றும் களப் பரீட்சைக்கு தோற்ற வேண்டியதுடன், அதிக புள்ளிகளைப பெற்ற முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்ற மூன்று மாணவர்களை மாகாண மட்டத்திற்கு் முன்னிலைப்படுத்த வேண்டுமக மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்படும் முதல் பத்து மாணவர்களை தேசிய மட்டத்திற்கு் முன்னிலைப்படுத்தலாம்.. தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விடைத்தாள் தேசிய அளவிலான மதிப்பெண்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும. போட்டியை ஏற்பாடு செய்தல் மற்றும் வினாத்தாள்கள் தயாரிக்கும் பொறுப்பு அந்தந்த மாகாணத்தின் பிரதி கல்விப் பணிப்பாளர்/ உதவிக் கல்விப் பணிப்பாளரிடம் (மனைப்பொருளியல்) ஒப்படைக்கப்பட வேண்டும். மாகாண மட்ட சான்றிதழ்கள் மாகாண கல்வி அலுவலகத்தினால் வழங்கப்பட வேண்டும்.

**2** ஆம் தொகுதி ஆராய்ச்சி திட்டங்கள்

வலய மட்டத்தில் அனுப்பப்படும் அனைத்து மாணவர்களின் ஆய்வுத் திட்டங்கள் மாகாண மட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். அதற்காக இணைப்பு 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள 5 அளவுகோள்கள் மற்றும் முன்னேற்ற அளவீட்டு அட்டவணையின்படி மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.. முழு மதிப்பெண்கள். 20 ஆகும். மூகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு அதிக புள்ளிகளைப் பெற்ற பத்து மாணவர்களை தேசிய மட்டத்திற்கு முன்னிலைப்படுத்தலாம் போட்டி ஒழுங்கமைப்பு மற்றும் வினாத்தாள்களை தயாரிக்கும் பொறுப்பு உரிய மாகாணத்திற்குரிய மாகாண பிரதி கல்விப் பணிப்பாளர் / உதவி கல்விப் பணிப்பாளரிடம் (மனைப்பொருளியல்) ஒப்படைக்கப்படும். மாகாண மட்ட சான்றிதழ்கள் மாகாண கல்வி அலுவலகத்தினால் வழங்கப்பட வேண்டும். அந்த திட்டம் மாணவருக்கே உரியது என்பதை பாடசாலையின் பாட ஆசிரியரின் பரிந்துரையுடன் அதிபர் உறுதி செய்ய வேண்டும்.

தொகுதி 3-புதிய படைப்புகள்

வலய மட்டத்தில் அனுப்பப்படும் அனைத்து மாணவர்களின் புதிய படைப்புகள் மாகாண மட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.. அதற்காக இணைப்பு 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள 5 அளவுகோள்கன் மற்றும் அளவீட்டு அட்டவணையின்படி மதிப்பீடு செய்யப்பட வேணடும் மொத்த மதிப்பெண்கள் 20 ஆகும். மாகாண மட்டத்தில் அதிக மதிப்பெண்கள் பெற்ற பத்து மாணவர்களை தேசிய மட்டத்திற்கு முன்னிலைப்படுத்தலாம்.. போட்டி ஒழுங்கமைப்பு மற்றும் வினாத்தாள்களை தயாரிக்கும் பொறுப்பு உரிய மாகாணத்திற்குரிய மாகாண பிரதி கல்விப் பணிப்பாளர் / உதவி கல்விப் பணிப்பாளரிடம் (மனைப்பொருளியல்) ஒப்படைக்கப்படும். மாகாண மட்ட சான்றிதழ்கள் மாகாண கல்வி அலுவலகத்தினால் வழங்கப்பட வேண்டும்... அந்த புதிய படைப்பு மாணவருக்கே உரியது என்பதை பாடசாலையின் பாட ஆசிரியரின் பரிந்துரையுடன் அதிபர் உறுதி செய்ய வேண்டும்.

.இந்த தொகுதி இரண்டு உப தொகுதிகளாக பிரிக்கப்படுகின்றன

1 ஒற்றை உப பிரிவு.
2குழு உப தொகுதி (ஆகக்கூடிய மாணவர்கள் 3 பேராக)

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் போட்டிப் பிரிவு (ஒற்றை உப தொகுதி மற்றும் குழு உப தொகுதியன் கீழ்) புள்ளிகளுடன் தேசிய மட்டத்திற்கு முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். இந்த போட்டித் தொடரின் கீழ் மாகாண மட்டத்தில் இருந்து தேசிய மட்டத்திற்கு ஒற்றை உப தொகுதி மற்றும் குழு உப தொகுதி போன்ற இரண்டு உபதொகுதிகளின் கீழ் சமர்ப்பிக்கபட வேண்டிய ஆகக்கூடிய மொத்டத போட்டிப் பிரிவு 10 ஆக இருத்தல் வேண்டும்.

### 3.5 தேசிய மட்டத்தில் மாணவர்களை தெரிவுசெய்தல்

**தொகுதி 1-எழுத்துத் தேர்வு மற்றும் களத் தேர்வு**

மாகாண மட்டத்தில் எழுத்துத் தேர்வு மற்றும் மாகாண மட்டத்திலான களப் பரீட்சைக்கு தோற்றி மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட முதல் பத்து மாணவர்கள் தேசிய மட்டத்திற்கு முன்னிலைப்படுத்தலாம். மாகாண மட்டத்தில், 10ஆம் இடத்துக்கு சமமான மதிப்பெண்கள் பெற்ற இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் இருக்கும்போது, அந்த சமமான புள்ளிகளை பெறும் விண்ணப்பதாரர்களுக்கு மனைப்பொருளியல் பாடத்திற்குப் பொறுப்பான மேலதிக சில வாயமொழி கேள்விகளை வழங்கி அதில் அதிக புள்ளிகளை பெறும் மாணவனை 10 ஆம் இடத்திற்கு தெரிவு செய்வதற்கு மேற்படி மட்டங்களின் நடுவர் குழு உட்பட உரிய ஒழுங்கிணைப்பாளர்களினால் பொறுப்பேற்க வேண்டும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் புள்ளிகளுடன் தேசிய மட்டத்திற்கு முன்னிலைப்படுத்த வேண்டும்... போட்டி ஏற்பாடு மற்றும் வினாத்தாள் தயாரிப்பதற்கான பொறுப்பு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் தொழில்நுட்பக் கல்விக் கிளையால் மேற்கொள்ளப்படுவதுடன், தேசிய மட்டத்திலான சான்றிதழ்கள் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் தொழில்நுட்பக் கல்விக் கிளையால். வீட்டுப் பொருளாதாரம் தொடர்பான கூடுதல் வாய்மொழி கேள்விகள் கேட்கப்பட வேண்டும், மேலும் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர் 10ஆம் இடத்துக்கு அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை ஏற்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் மதிப்பெண்கள் தேசிய அளவில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மற்றும் தேசிய அளவிலான சான்றிதழ்கள் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சகத்தின் தொழில்நுட்பக் கல்விக் கிளையால் வழங்கப்படும்

**2 ஆம் தொகுதி ஆராய்ச்சி திட்டங்கள்**

மாகாண மட்டத்தில் ஆராய்ச்சி திட்டங்களை முன்வைத்து மாகாண மட்டத்தில் தெரிவாகும் அதிக புள்ளிகளைப் பெற்ற பத்து மாணவர்களை தேசிய மட்டத்திற்கு முன்னிலைப்படுத்தலாம்.'. தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் புள்ளிகளுடன் தேசிய மட்டத்திற்கு முன்னிலைப்படுத்த வேண்டும். போட்டி ஒழுங்கமைப்பு மற்றும் மதிப்பீடு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் தொழில்நுட்பக் கல்விக் கிளையால் மேற்கொளளப்படுவதுடன் தேசிய மட்டத்திலான சான்றிதழ்கள் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் தொழில்நுட்பக் கல்விக் கிளையால் வழங்கப்படும்

**தொகுதி 3-புதிய படைப்புகள்**

மாகாண மட்டத்தில் புதிய படைப்புகளை முன்வைத்து மாகாண மட்டத்தில் தெரிவாகி அதிகப்படியான புள்ளிகளை பெற்ற 10 மாணவர்களை தேசிய மட்டத்திறகு முன்னிலைப்படுத்தலாம். தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் புள்ளிகளுடன் தேசிய மட்டத்திற்கு முன்னிலைப்படுத்த வேண்டும். போட்டி ஒழுங்கமைப்பு மற்றும் மதிப்பீடு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் தொழில்நுட்பக் கல்விக் கிளையால் மேற்கொளளப்படுவதுடன் தேசிய மட்டத்திலான சான்றிதழ்கள் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் தொழில்நுட்பக் கல்விக் கிளையால் வழங்கப்படும்

## 4.போட்டி மட்டங்களுக்கான கால எல்லைகள்

1) பாடசாலை மட்டத்திலான போட்டிகள் - ஏப்ரல் 15 க்கு முன் நடத்தப்பட வேண்டும்.
2) கோட்ட மட்டத்திலான போட்டிகள் - மே 01 க்கு முன் நடத்தப்பட வேண்டும்.
3) வலய மட்டத்திலான போட்டிகள் - ஜுன் 15 க்கு முன் நடத்தப்பட வேண்டும்
4) மாகாண மட்டத்திலான போட்டிகள் - ஆகஸ்ட் 15 க்கு முன் நடத்தப்பட வேண்டும்.
5) தேசிய மட்டத்திலான போட்டிகள் - அக்டோபர் 15 ஆம் தேதிக்கு முன் நடத்தப்பட வேண்டும்.

க.வே. அந்தந்த கல்வியாண்டில் பாடசாலை தவணைக்குறிப்பு வெயிட்ட பிறகு தேவைக்கேற்ப மேற்படி போட்டி காலங்களை திருத்துவதற்கு கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளருக்கு (தொழில்நுட்பக் கல்வி) முடியும்.

## 5.போட்டித் தொகுதிகளுக்கான அறிவுரைகள்

தொகுதி 1-எழுத்துமூல வினாத்தாள் தேர்வு மற்றும் களத் தேர்வு

- இந்தப் தொகுதியல் தோற்றும் மாணவர்கள் எழுத்துமூல தேர்வு மற்றும் களத் தேர்வு ஆகிய இரண்டிலும் பங்கேற்க வேண்டும். இது ஒரு போட்டி தொகுதியாக கருதப்படுகிறது.
- இது மொத்தம் 100 மதிப்பெண்களைக் கொண்டதாகும்..
  எழுத்துமூல பரீட்சைக்கு 40 மதிப்பெண்களும், களத் தேர்வுக்கு 60 மதிப்பெண்களும் என பிரிக்கப்படுகின்றது.

தொகுதி 1 – எழுத்துமூல வினாத்தாள்

❖ கட்டமைப்பு

- கேள்விகள் 40 ஆகும்.
- இதில் 4 பதில்களுடன் ல்தேரடவுகள் 20 ஆகும். 15 இடைவெளி நிரப்புதல் மற்றும் 15 வரைதல் வகையின் கேள்விகள் 05 உள்ளடங்க வேண்டும்..
- இந்த வினாத்தாள் 10 மற்றும் 11 ஆம் தரங்களின் பொருளியல் பாடத்துறைக்குரிய வினாத்தாளாக இருத்தல் வேண்டும்.
- நேரம் 01 மணித்தியாலம்

❖ புள்ளிகள்

- 40 ஆகும் ஒரு கேள்விக் 01 புள்ளி வீதம் வழங்கப்பட வேண்டும்.

### 1 தொகுதி இடப்பரீட்சை - இடப்பரீட்சை (Spot Test)

❖ கட்டமைப்பு

முனைப்பொருளியல் பாடம் தொடர்பான மாதிரிகள் (வாழும் மற்றும் வாழாதவை) தனத்தனயாக வகுப்பறையில் வைக்கப்பட்டு, அது தொடர்பான வினாத்தாளுக்கு பதில் எழுதுமாறு அறிவுறுத்தப்பட வேண்டும். குறிப்பிட்ட நேரத்திற்குள் மாதிரிகள் தொடர்பான பதில்களை அளிக்கும் வகையில் கேள்விகளைத் தயாரிப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். கள சோதனைக்கு 30 மாதிரிகள் திட்டமிடப்பட வேண்டும். ஒரு இடத்திற்கு ஒதுக்கப்பட்ட நேரம் ஒவ்வொன்றும் 02 நிமிடங்கள் வீதம் மொத்த நேரம் 60 நிமிடங்கள ஆகும். (இதற்காக சில முன்மாதிரி கேள்விகள் இணைக்கப்பட்டுள்ளன.)

❖ புள்ளிகள்

- ஒரு மாதிரிக்கு 2 மதிப்பெண்கள வீதம் 2 x 30.= 60 ஆகும் (30 கேள்விகளுடன்

2 தொகுதி 2- ஆராய்ச்சி திட்டங்கள

மனைப்பொருளியல பாடத்துறை 4 இன் ஊடாக ஆராய்ச்சித் திட்டத்தை மேற்கொள்ளலாம்

1. உணவு மற்றும் ஊட்டச்சத்து துறை
2. வீட்டு நிர்வாகத் துறை
3. ஜவுளி தொழில்நுட்பத் துறை
4. நிறுவர் அபவிருத்தி துறை

இந்த போட்டியில் பங்கேற்கும் மாணவர்கள் பின்வருமாறு ஆராய்ச்சி திட்டங்கழள மேற்கொள்ள வேண்டும்.

1. மேற்படி துறைகளில் ஒன்றை தெரிவுசெய்து ஐந்து பக்கங்களுக்கும் குறையாத ஆராய்சித் திட்டம் ஒன்றை தாயரித்து பாடத்திற்குப் பொறுப்பான ஆசிரியரின் பரிந்துரை மற்றம் பாடசாலை அதிபரின் அனுமதியுடன ஒரு சுருக்கமான ஆராய்ச்சி ஒன்றை மேற்கொள்ளலாம்

2.ஆராய்ச்சி திட்டம் ஒன்றை முன்வைக்கக்கூடிய படிவம்

1. ஆராயச்சி சிக்கல்களை இனங்காணுதல்
2. ஆராய்ச்சி தலைப்பொன்றை தெரிவுசெய்தல்
3. ஆராய்ச்சி முறைமையை முன்வைத்தல்

3. இரண்டு கிழைமைக்குள் சுருக்கமான ஆராய்ச்சிகளை நிறைவு செய்து திட்ட அறிக்கை ஒன்று மற்றும் (power point) மூலமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தொகுதி 3-புதிய படைப்புகள்

மனைப்பொருளியல் 4 பாடத்திட்டங்கள் ஊடாக புதிய படைப்புகளை உருவாக்க முடியும்.

1. உணவு மற்றும் போஷாக்குத் துறை
2. வீட்டு நிர்வாகத்துறை
3. ஜவுளி தொழில்நுட்பத்துறை
4. சிறுவர் அபிவிருத்தி துறை

a. மேற்படி துறைகளில் ஒன்றை தெரிவு செய்து அடிப்படை திட்டம் ஒன்றை தயாரித்து பாடத்திற்குப் பொறுப்பான ஆசிரியரின் பரிந்துரையின் அடிப்படையில் பாடசாலை அதிபரின அனுமதியுடன் படைப்பு உருவாக்கப்பட்டு அடிப்படை திட்டத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

b. அடுத்த கட்டத்திற்கான புதிய வடிவமைப்பின் விளக்கக்காட்சியில், அந்தந்த மட்டங்களில் பெறப்பட்ட அபிவிருத்தி முன்மொழிவுகளை உள்ளடக்கி மேம்படுத்தப்பட்ட புதிய வடிவமைப்பை அடுத்த கட்டத்திற்கு வழங்க முடியும

c. அதன்போது ஆரம்பத்தில் இருந்தே, அனைத்து மட்டங்களிலும் மாணவரின் உரிமை ஒவ்வொரு மட்டத்திலும் புகைப்படங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

6. மொழிமூலம்

சிங்கள மற்றும் தமிழ் ஊடகங்கள் தொடர்பாக தனித்தனியாக போட்டிகள் நடத்தப்படக்கூடாது. உரிய சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல் போட்டிகள் ஒரே நாளில் ஒரே நேரத்தில் நடத்தப்பட வேண்டும். இறுதியில் மொழி ஊடகத்தைப் புறக்கணித்து பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் மட்டுமே மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

7. தேசிய அளவில் சான்றிதழ்களை வழங்குதல்

தேசிய மட்டத்தில் பங்குபெறும் அனைத்து போட்டியாளர்களுக்கும் பங்கேற்புச் சான்றிதழ்களையும் ஒவ்வொரு போட்டிப் பிரிவிலும் முதல் 10 இடங்களைப் பெறும் போட்டித் தொடர் 30 பெறும் போட்டியாளர்களுக்கு வெற்றிச் சின்னங்களையும் வழங்குவதற்கு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்படும்

எனது இலக்கம் ED/1/17/2/HES/W05 மற்றும் 2015.02.19 ஆம் திகதிய 09/2015 ஆம் இலக்க சுற்றிக்கை ஆகியவை இதன்மூலம் ரத்து செய்யப்படுவதாகவும், மொழிபெயர்ப்புகளுக்கு இடையில் முரண்பாடு இருந்தால், சிங்களப் பதிப்பே மேலோங்கும் என்பதையும் மேலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இணைப்பு 01. இடப் பரிசோதனைக்கான மாதிரி கேள்விகள்
இணைப்பு 02. ஆராய்ச்சி திட்டத்தை தெரிவுசெய்யும் அளவுகோல்கள்
இணைப்பு 03. புதிய வடிவமைப்புகளை தெரிவு செய்யும் அளவுகோல்கள்

நாலக்க கலுவெவ
செயலாளர்

பிரதிகள்:-

1. அனைத்து மாகாண மனைப்பொருளியல் பாட ஒருங்கிணைப்பு அலுவலர்கள் - தே.ந.எ.
2. அனைத்து வலய வீட்டுப் பொரு மனைப்பொருளியல பாட் ஒருங்கிணைப்பு அலுவலர்கள் -

களப்பரீட்சைக்காகன மாதிரி கேள்விகள்

- உயவு மற்றும் போஷாக்கு

(i) வழங்கப்பட்டுள்ள A, B, C மற்றும் D மாதிரிகளுக்கு பெயரிடவும்

A. ...................................... C. ....................................

B. ..................................... D. ....................................

(11) ஒரு குழந்தைக்கு மேலதிக உணவாக இந்த தாதுக்கள் எந்த வடிவத்தில் வழங்கப்படுகின்றன?

- ......................................................

- வீட்டு நிர்வாகம்

(i) கொடுக்கப்பட்ட வரைபடத்தை அவதானித்து (ஒரு தேயிலை தோட்டத்தின் படம்) ஒருவரின் உரிமையை வரையறுக்க எல்லைகளை தயாரிப்பதற்காக எடுக்கக்கூடிய இரண்டு சாத்தியமான வழிகளைக் குறிப்பிடவும்.

- ............................................................
- ............................................................

(ii) இந்த இடத்தை இன்னும் அழகாக்க எடுக்கக்கூடிய இரண்டு வழிகளைக் குறிப்பிடவும்.

(i) ........................................ (ii) ..................................................

- ஜவுளி தொழில்நுட்பம்

(i) கொடுக்கப்பட்ட மாதிரியில் காட்டப்பட்டுள்ள தையல் முறையை பெயரிடவும

..................................................

(ii) இந்த தையல் முறையைஇ பயன்படுத்துவதற்கு இரண்டு பொறுத்தமான சந்தர்ப்பங்களை குறிப்பிடவும்

..................................................

- சிறுவர் அபிவிருத்தி

(i) இந்த வரைபடத்தில் A B C மற்றும் D போன்ற இடங்களை பெயரிட்டு அந்த இடங்களில் நடைபெறும் பணிகளை குறிப்பிடவும்

| பெயர் | பணி |
|---|---|
| A. ........................... | ................................................ |
| B. ............................. | ................................................ |
| C. ............................. | ................................................ |
| D. ........................ | ............................... |

இணைப்பு 02

<u>ஆராய்ச்சித் திட்டத்தைத் தெரிவுசெயவதற்கான அளவுகோல்கள்</u>

மனைப்பொருளியல் பாடத்திற்கான ஆராய்ச்சித் திட்டமொன்றை தெரிவுசெய்வதற்கு பின்வரும் 5 அளவுகோல்களைப் பயன்படுத்தலாம்.

மனைப்பொருளியல் பாடத்திற்கு தொடர்புடைய

1.

- தெரிவுசெய்யப்படும் ஆராய்ச்சி தலைப்பு உணவு மற்றும் போஷாக்கு, வீட்டு நிர்வாகம், ஜவுளி தொழில்நுட்பம் மற்றும் சிறுவர் அபிவிருத்தி போன்ற மனைப்பொருளியலின் முக்கிய பிரிவுகள் தொடர்பான ஆராய்ச்சியாக இருக்க வேண்டும். அந்த துறைகளில் ஒரு உண்மையான பிரச்சனை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அந்த பிரச்சனைக்கு உரிய தீர்வுகளை ஆய்வு மூலம் முன்வைக்க வேண்டும்.

2. செயன்முறைத் தன்மை மற்றும் நிஜ வாழ்க்கைக்குள்ள முக்கியத்துவம்

- தெரிவுசெய்யப்பட்ட ஆராய்ச்சி பயனுள்ளதாகவும், பெரும்பான்மையினருக்கு பயனுள்ளதான மற்றும், அன்றாட வாழ்க்கைக்கு பொருத்தமானதாகவும் இருக்க வேண்டும்.

3. உள்ளூர் வளங்களைப் பயன்படுத்துதல் மற்றும் தரவு எளிதாகக் கிடைத்தல்.

- மாணவர்கள் ஆராய்ச்சி செய்வதற்குத் தேவையான வழங்கள் நாட்டிற்கு எளிதில் கிடைக்கக்கூடியதாகவும் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும் இருக்க வேண்டும். மேலும், தரவுகள் குறைந்த செலவில் கிடைக்கக்கூடிய ஆராய்ச்சியாக இருக்க வேண்டும்

  (மிகவும் தீவிரமான, நிதி ரீதியில் விலை அதிகம் அல்லது சாத்தியமில்லாத தலைப்புகள் தவிர்க்கப்பட வேண்டும்.).

4. ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள் மற்றும் தீர்வு முன்மொழிவுகள

- ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள் ஆராய்ச்சி அறிக்கையில் குறிப்பிடப்பட வேண்டும். அந்த கண்டுபிடிப்புகளால் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களுக்கான ஆராய்ச்சி முன்மொழிவுகளை மாணவர் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன் அந்த முன்மொழிவுகள் சாத்தியமானதாக இருக்க வேண்டும்.

5. நேர முகாமைத்துவம்

மாணவர்களுக்கு வழங்கப்பட்ட 02 வார காலத்திற்குள் ஆராய்ச்சித் திட்டம் முடிக்கப்பட வேண்டும். ஆய்வுத் திட்ட முன்மொழிவினை பாடசாலை அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டு நடைமுறைப்படுத்த வேண்டும். ஆராயச்சி அறிக்கையை அந்த 02 வார காலத்திற்குள் பூர்த்தி செய்து 03 பிரதிகளுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

மனைப் பொருளியல் பாடம் தொடர்பான ஆராய்ச்சி திட்டம் ஒன்றை தெரிவுசெய்வதற்கான அளவுகோல்கள்

| அளவுகோல் | மிகவும் நல்லது(4) | நல்லது (3) | சாதாரணமானது (2) | [illegible] (1) |
|---|---|---|---|---|
| மனைப்பொருளியல் பாடத்திற்கு பொருந்தும் | தெரிவுசெய்யப்பட்ட ஆராய்ச்சி தலைப்பு மனைப்பொருளியலின் முக்கிய பகுதிகளான உணவு மற்றும் ஊட்டச்சத்து, வீட்டு நிர்வாகம், ஜவுளி தொழில்நுட்பம் மற்றும் சிறுவர் அபிவிருத்தி ஆகியவற்றுடன் தொடர்புடையது. அந்த துறைகளில் ஒரு உண்மையான பிரச்சனை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அந்த பிரச்சனைக்கு உரிய தீர்வுகள் ஆராய்ச்சி மூலம் முன்வைக்கப்பட்டுள்ளன. | தெரிவுசெய்யப்பட்ட ஆராய்ச்சி தலைப்பு மனைப்பொருளியலின் முக்கிய பகுதிகளான உணவு மற்றும் ஊட்டச்சத்து, வீட்டு நிர்வாகம், ஜவுளி தொழில்நுட்பம் மற்றும் சிறுவர் அபிவிருத்தி ஆகியவற்றுடன் தொடர்புடையது. அந்த துறைகளில் ஒரு உண்மையான பிரச்சனை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அந்த பிரச்சனைக்கு உரிய தீர்வுகள் ஆராய்ச்சி மூலம் முன்வைக்கப்படவில்லை | தெரிவுசெய்யப்பட்ட ஆராய்ச்சி தலைப்பு மனைப்பொருளியலின் முக்கிய பகுதிகளான உணவு மற்றும் ஊட்டச்சத்து, வீட்டு நிர்வாகம், ஜவுளி தொழில்நுட்பம் மற்றும் சிறுவர் அபிவிருத்தி ஆகியவற்றுடன் தொடர்புடையதாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த துறைகளில் ஒரு உண்மையான பிரச்சனை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அந்த பிரச்சனைக்கு உரிய தீர்வுகள் ஆராய்ச்சி மூலம் முன்வைக்கப்படவில்லை | தெரிவுசெய்யப்பட்ட ஆராய்ச்சி தலைப்பு உணவு மற்றும் ஊட்டச்சத்து, வீட்டு நிர்வாகம், ஜவுளி தொழில்நுட்பம் மற்றும் சிறுவர் அபிவிருத்தி ஆகியவற்றுடன் தொடர்புடையதாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த துறைகளில் ஒரு உண்மையான பிரச்சனை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அந்த பிரச்சனைக்கு உரிய தீர்வுகள் ஆராய்ச்சி மூலம் முன்வைக்கப்படவில்லை |
| செயல்முறைத்தன்மை மற்றும் நிஜ வாழ்க்கைக்கு உள்ள முக்கியத்துவம் | தெரிவுசெய்யப்பட்ட ஆராய்ச்சி நடைமுறைக்குரியது. பெரும்பாலான மக்கள் அதன் மூலம் பயனடையலாம். அன்றாட வாழ்க்கைக்கு ஏற்றது | தெரிவுசெய்யப்பட்ட ஆராய்ச்சி நடைமுறைக்குரியது. பெரும்பாலான மக்கள் அதன் மூலம் பயனடையலாம். அன்றாட வாழ்க்கைக்கு ஏற்றதல்ல | தெரிவுசெய்யப்பட்ட ஆராய்ச்சி நடைமுறைக்குரியது. பெரும்பாலான மக்கள் அதன் மூலம் பயனடைய மாட்டார்கள். அன்றாட வாழ்க்கைக்கு ஏற்றதல்ல | தெரிவுசெய்யப்பட்ட ஆராய்ச்சி நடைமுறைக்குரியதல்ல. பெரும்பாலான மக்கள் அதன் மூலம் பயனடைய மாட்டார்கள். அன்றாட வாழ்க்கைக்கு ஏற்றதல்ல |
| உள்ளூர் வளங்களின் பயன்பாடு மற்றும் தரவுகளை எளிதில் கிடைக்கக்கூடிய | மாணவர்கள் உள்நாட்டில் ஆராய்ச்சிக்குத் தேவையான ஆதாரங்களை எளிதாகக் கண்டறியலாம். சுற்றுச்சூழல் நட்பு வளங்கள் பயன்படுத்தப்படுகின்றன. குறைந்த விலையில் தரவுகள் எளிதில் பெற்றுக்கொள்ளலாம் | மாணவர்கள் உள்நாட்டில் ஆராய்ச்சிக்குத் தேவையான ஆதாரங்களை எளிதாகக் கண்டறியலாம். சுற்றுச்சூழல் நட்பு வளங்கள் பயன்படுத்தப்படுகின்றன. குறைந்த விலையில் தரவுகள் எளிதில் பெற்றுக்கொள்ளமுடியவில்லை. | மாணவர்கள் உள்நாட்டில் ஆராய்ச்சிக்குத் தேவையான ஆதாரங்களை எளிதாகக் கண்டறியலாம். சுற்றுச்சூழல் நட்பு வளங்கள் பயன்படுத்தப்படுகின்றன. குறைந்த விலையில் தரவுகள் எளிதில் பெற்றுக்கொள்ளமுடியவில்லை. | மாணவர்கள் உள்நாட்டில் ஆராய்ச்சிக்குத் தேவையான ஆதாரங்களை எளிதாகக் கண்டறிய முடியாது. சுற்றுச்சூழல் நட்பு வளங்கள் பயன்படுத்தப்படவில்லை. குறைந்த விலையில் தரவுகள் எளிதில் பெற்றுக்கொள்ளமுடியவில்லை. |
| ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள் மற்றும் தீர்வு முன்மொழிவுகள். | ஆராய்ச்சி முடிவுகள் ஆய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளன. கண்டுபிடிப்புகள் வெளிப்படுத்திய விடயங்களுக்கான முன்மொழிவுகளை மாணவர் ஆய்வாளர் சமர்ப்பித்துள்ளார். அந்த பரிந்துரைகள் நடைமுறைக்குரியவை. | ஆராய்ச்சி முடிவுகள் ஆய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளன. கண்டுபிடிப்புகள் வெளிப்படுத்திய விடயங்களுக்கான முன்மொழிவுகளை மாணவர் ஆய்வாளர் சமர்ப்பித்துள்ளார். அந்த பரிந்துரைகள் நடைமுறைக்குரியவை அல்ல. | ஆராய்ச்சி முடிவுகள் ஆய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளன. கண்டுபிடிப்புகள் வெளிப்படுத்திய விடயங்களுக்கான முன்மொழிவுகளை மாணவர் ஆய்வாளர் சமர்ப்பிக்கப்படவில்லை. அந்த பரிந்துரைகள் நடைமுறைக்குரியவை அல்ல. | ஆராய்ச்சி முடிவுகள் ஆய்வு அறிக்கையில் கூறப்படவில்லை. அந்த கண்டுபிடிப்புகள் மூலமாக வெளிப்படுத்திய விடயங்களுக்கான முன்மொழிவுகளை மாணவர் ஆய்வாளர் சமர்ப்பிக்கப்படவில்லை. இருப்பினும் அந்த பரிந்துரைகள் நடைமுறைக்குரியவை அல்ல. |
| நேர முகாமைத்துவம் | ஆராய்ச்சி திட்டம் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட 02 வார காலப்பகுதிக்குள் முடிக்கப்பட்டுள்ளது. ஆய்வு திட்ட முன்மொழிவு பாடசாலை அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆராய்ச்சிக்கான திட்ட அறிக்கை அந்த 02 வாரங்களில் முடிக்கப்பட்டு 03 பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது | ஆராய்ச்சி திட்டம் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட 02 வார காலப்பகுதிக்குள் முடிக்கப்பட்டுள்ளது. ஆய்வு திட்ட முன்மொழிவு பாடசாலை அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆராய்ச்சிக்கான திட்ட அறிக்கை அந்த 02 வாரங்களில் முடிக்கப்பட்டு 03 பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது | ஆராய்ச்சி திட்டம் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட 02 வார காலப்பகுதிக்குள் முடிக்கப்பட்டுள்ளது. ஆய்வு திட்ட முன்மொழிவு பாடசாலை அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்படவில்லை. ஆராய்ச்சிக்கான திட்ட அறிக்கை அந்த 02 வாரங்களில் முடிக்கப்பட்டு 03 பிரதிகளில் சமர்ப்பிக்கப்படவில்லை | ஆராய்ச்சி திட்டம் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட 02 வார காலப்பகுதிக்குள் முடிக்கப்படவில்லை. ஆய்வு திட்ட முன்மொழிவு பாடசாலை அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்படவில்லை. ஆராய்ச்சிக்கான திட்ட அறிக்கை அந்த 02 வாரங்களில் முடிக்கப்பட்டு 03 பிரதிகளில் சமர்ப்பிக்கப்படவில்லை |

இணைப்பு 03

சாதரணதர மனைப்பொருளியல் பாடம் தொடர்பாக (Innovation) தெரிவுசெய்யும் அளவுகோல்கள்

1. மனைப் பொருளியல் பாடத்திற்கு பொருந்தக்கூடிய தன்மை

    ○ நூதனம் என்பது மனைப்பொருளியலின் முக்கிய பகுதிகளான உணவு மற்றும் ஊட்டச்சத்து, வீட்டு நிர்வாகம், ஜவுளி தொழில்நுட்பம் மற்றும் சிறுவர் அபிவிருத்தி போன்றவற்றுடன் தொடர்புடைய வடிவமைப்பாக இருக்க வேண்டும். இந்த ஒவ்வொரு துறையிலும் ஒரு உண்மையான பிரச்சனை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும். அந்த பிரச்சனைக்கு பொருத்தமான தீர்வுகளை நுதனமான முறையில் முன்வைக்க வேண்டும்.

2. செயன்முறைத் தன்மை மற்றும் நிஜ வாழ்க்கைக்குள்ள முக்கித்துவம்

    ○ நூதனம் என்பது நடைமுறைக்குரியதாகவும், பெரும்பான்மையினருக்கு பயனுள்ளதாகவும், அன்றாட வாழ்க்கைக்கு பொருத்தமானதாகவும் இருக்க வேண்டும்.

3. உள்ளூர் வளங்களைப் பயன்படுத்த முடியும்.

    ○ நூதனத்திற்குத் தேவையான வளங்கள் உள்நாட்டில் எளிதாகக் காணக்கூடியதாகவும், சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்காததாகவும் இருக்க வேண்டும். மேலும், அந்த வளங்கள் குறைந்த செலவில் பெறக்கூடிய நூதனமானதாக இருக்க வேண்டும்.

4. பிரச்சனைக்கான தீர்வு ஆலோசனைகள

    ○ நூதன முறையில் அடையாளம் காணப்பட்ட பிரச்சனைக்கான தீர்வு முன்மொழிவுகள் முன்வைக்கப்பட வேண்டும் மற்றும் அந்த முன்மொழிவுகள் நடைமுறையானதாக் இருக்க வேண்டும்.

5. ஆக்கப்பூர்வமா நவீன தொழில்நுட்பத்தின் பயன்பாடு

    ○ நூதனமான சமீபத்திய தொழில்நுட்பம் அல்லது ஆக்கபூர்வமான கருத்துகளின் அடிப்படையில் இருக்க வேண்டும். இது பாதுகாப்பானதாக வடிவமைக்கப்பட வேண்டும்

## மனைப் பொருளியல் பாடம் தொடர்பான ஆராய்ச்சி திட்டம் ஒன்றை (Innovation) தெரிவுசெய்வதற்கான அளவுகோல்கள்

| அளவீடுகள் | மிகவும் நல்லது(4) | நல்லது (3) | சாதாரணமானது (2) | அபிவிருத்தியடைய வேண்டும்(1) |
|---|---|---|---|---|
| மனைப்பொருளியல் பாடத்திற்கு பொருந்தும் | தெரிவுசெய்யப்பட்ட ஆராய்ச்சி தலைப்பு மனைப்பொருளியலின் முக்கிய பகுதிகளான உணவு மற்றும் ஊட்டச்சத்து, வீட்டு நிர்வாகம், ஜவுளி தொழில்நுட்பம் மற்றும் சிறுவர் அபிவிருத்தி ஆகியவற்றுடன் தொடர்புடையது.<br><br>அந்த துறைகளில் ஒரு உண்மையான பிரச்சனை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.<br><br>அந்த பிரச்சனைக்கு உரிய தீர்வுகள் ஆராய்ச்சி மூலம் முன்வைக்கப்பட்டுள்ளன. | நூதனம் என்பது உணவு மற்றும் போஷாக்கு, வீட்டு நிர்வாகம், ஜவுளி தொழில்நுட்பம் மற்றும் சிறுவர் அபிவிருத்தி போன்ற மனைப் பொருளியலின் மேம்பட்ட அம்சங்களை அடிப்படையாகக் கொண்ட வடிவமைப்பு ஆகும்.<br><br>அந்த துறைகளில் ஒரு உண்மையான பிரச்சனை தெரிவுசெய்யப்பட்டுள்ளது<br><br>அந்த பிரச்சனைக்கு நூதனமான சரியான தீர்வுகள் வழங்கப்படவில்லை. | நூதனம் என்பது உணவு மற்றும் போஷாக்கு, வீட்டு நிர்வாகம், ஜவுளி தொழில்நுட்பம் மற்றும் சிறுவர் அபிவிருத்தி போன்ற மனைப் பொருளியலின் மேம்பட்ட அம்சங்களை அடிப்படையாகக் கொண்ட வடிவமைப்பு ஆகும்.<br><br>அந்த துறைகளில் ஒரு உண்மையான பிரச்சனை தெரிவுசெய்யப்படவில்லை<br><br>அந்த பிரச்சனைக்கு நூதனமான சரியான தீர்வுகள் வழங்கப்படவில்லை. | நூதனம் என்பது உணவு மற்றும் போஷாக்கு, வீட்டு நிர்வாகம், ஜவுளி தொழில்நுட்பம் மற்றும் சிறுவர் அபிவிருத்தி போன்ற மனைப் பொருளியலின் மேம்பட்ட அம்சங்களை அடிப்படையாகக் கொண்ட வடிவமைப்பு அல்ல<br><br>அந்த துறைகளில் ஒரு உண்மையான பிரச்சனை தெரிவுசெய்யப்படவில்லை<br><br>அந்த பிரச்சனைக்கு நூதனமான சரியான தீர்வுகள் வழங்கப்படவில்லை |
| செயன்முறைத்தன்மை மற்றும் நிஜ வாழ்க்கைக்கு உள்ள முக்கியத்துவம் | புத்தாக்கம் செயன்முறையானது<br><br>பெரும்பான்மையானவர்களுக்கு பயனுள்ள படைப்பாகும்<br><br>அன்றாட வாழ்க்கைக்கு ஏற்ற படைப்பாகும் | நூதனமானது என்பது நடைமுறைக்குரியதாகும்.<br><br>பெரும்பான்மையானவர்களுக்கு பயனுள்ள வடிவமைப்பாகும்<br><br>அன்றாட வாழ்க்கைக்கு ஏற்ற வடிவமைப்பு அல்ல. | நூதனமானது என்பது நடைமுறைக்குரியதாகும.<br><br>பெரும்பான்மையானவர்களுக்கு பயனுள்ள வடிவமைப்பு அல்ல<br><br>அன்றாட வாழ்க்கைக்கு ஏற்ற வடிவமைப்பு அல்ல | நூதனமானது என்பது நடைமுறைக்குரியதல்ல<br><br>பெரும்பான்மையானவர்களுக்கு பயனுள்ள வடிவமைப்பு அல்ல<br><br>அன்றாட வாழ்க்கைக்கு ஏற்ற வடிவமைப்பு அல்ல |
| உள்ளூர் வளங்களின் பயன்பாடு மற்றும் தீர்வுகளை எளிதில் கிடைக்கக்கூடிய | புத்தாக்கத்திற்குத் தேவையான வளங்கள் உள்நாட்டில் உடனடியாகக் கிடைக்கின்றன<br>சுற்றுச்சூழல் நட்பு வளங்கள் பயன்படுத்தப்படுகின்றன<br><br>பயன்படுத்தப்படும் வளங்கள் குறைந்த செலவில் பெறக்கூடிய ஒரு கண்டுபிடிப்பாகும் | நூதனத்திற்கு தேவையான வளங்கள் உள்நாட்டில் உடனடியாகக் கிடைக்கக்கூடியவையாகும்<br><br>சுற்றுச்சூழல் நட்பு வளங்கள் பயன்படுத்தப்படுகின்றன.<br><br>பயன்படுத்தப்படும் வளங்கள் மலிவான விலையில் கிடைக்கக்கூடிய கண்டுபிடிப்புகள் அல்ல | நூதனத்திற்கு தேவையான வளங்கள் உள்நாட்டில் எளிதாக கிடைக்கக்கூடியவையாகும<br><br>சுற்றுச்சூழல் நட்பு வளங்கள் பயன்படுத்தப்படுகின்றன.<br><br>பயன்படுத்தப்படும் வளங்கள் மலிவான விலையில் கிடைக்கக்கூடிய கண்டுபிடிப்புகள் அல்ல | நூதனத்திற்கு தேவையான வளங்கள் உள்நாட்டில் எளிதாக கிடைக்கக்கூடியவை அல்ல<br><br>சுற்றுச்சூழல் நட்பு வளங்கள் பயன்படுத்தப்படவில்லை<br><br>பயன்படுத்தப்படும் வளங்கள் மலிவான விலையில் கிடைக்கக்கூடிய கண்டுபிடிப்புகள் அல்ல |
| | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் முன்மொழிவுகள் . | புதுமைக்கான சிக்கலைக் கண்டறிந்தது.<br>அந்த சிக்கலுக்கான தீர்வுகள் வடிவமைப்பில் வழங்கப்படுகின்றன.<br><br>அந்த முன்மொழிவுகள் நடைமுறைக்குரியவை | நூதனத்திற்கான சிக்கல் கண்டறியப்பட்டுள்ளது.<br>.<br><br>அந்த சிக்கலுக்கான தீர்வுகள் வடிவமைப்பின் மூலமாக வழங்கப்படுகின்றன.<br><br>அந்த முன்மொழிவுகள் நடைமுறையானதல்ல | நூதனத்திற்கான சிக்கல் கண்டறியப்பட்டுள்ளது<br>.<br><br>அந்த சிக்கலுக்கான தீர்வுகள் முன்மொழிவுகள் வடிவமைப்பின் மூலமாக வழங்கப்பட்டவை அல்ல.<br>.<br><br>அந்த முன்மொழிவுகள் நடைமுறையானதல்ல<br>. | நூதனத்திற்கான சிக்கல் கண்டறியப்படவில்லை<br>.<br><br>அந்த சிக்கலுக்கான தீர்வுகள் முன்மொழிவுகள் வடிவமைப்பின் மூலமாக வழங்கப்பட்டவை அல்ல.<br><br>அந்த முன்மொழிவுகள் நடைமுறையானதல்ல<br>. |
| .ஆக்கபூர்வமாக நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது | புதுமை சமீபத்திய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியது.<br>படைப்புக் கருத்துகளின் அடிப்படையில். | நூதனம் நவீனமான தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டதாகும் பயன்படுத்தியது.<br><br>பாதுகாப்பாக திட்டமிடப்பட்ட வடிவமைப்பு அல்ல. | நூதனம் நவீனமான தொழில்நுட்பத்துடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆக்கபூர்வமான கருத்துக்களின் அடிப்படையை கொண்டதல்ல.<br>.<br><br>பாதுகாப்பாக திட்டமிடப்பட்ட வடிவமைப்பு அல்ல | நூதனம் நவீனமான தொழில்நுட்பத்துடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆக்கபூர்வமான கருத்துக்களின் அடிப்படையை கொண்டதல்ல.<br>.<br><br>பாதுகாப்பாக திட்டமிடப்பட்ட வடிவமைப்பு அல்ல |